செ.கு.எண் : 99

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

### அறிக்கை – 10.3.2012

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.துரைராஜ் அவர்கள் 7.3.2012 அன்று திருக்கோயில் பாதுகாப்பு பணிக்காக தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சாலையோர மரத்தில் மோதி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. துரைராஜ் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. துரைராஜ் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. துரைராஜ் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா<br>தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்<br>செய்தி, மக்கள் தொடர்புத் துறை,<br>சென்னை-9